1970 ஏப்ரல் 4]

Temple Administration

*688 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government is aware of the agitation of the Tamil Nadu Hindu Mission for better temple administration?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : *தமிழ்நாடு இந்து சபையைச் சேர்ந்த ஏறத்தாழ 50 உறுப்பினர்கள் 24—11—1969 அன்று இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையரின் அலுவலகத்தின் முன்னர் உண்ணா நோன்பு இருந்தனர். மேற் சொன்ன சபையைச் சேர்ந்த ஏறத்தாழ 17 உறுப்பினர்கள் 24-11-1969 அன்று திருநெல்வேலி இந்து சமய அறக் கட்டளைகள் துணை ஆணையர் அலுவலகத்தின் முன்னர் உண்ணா நோன்பு இருந்தனர். மேற்சொன்ன சபையின் பல்வேறு கோரிக்கைகளை அரசு பரிசிலனை செய்தது. இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையர் அவர்களின் கோரிக்கைகளை எங்கெங்கு ஏற்க இயலுமோ அங்கெல்லாம் ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த கேள்விக்கும் பதில் சொல்லிவிடலாம்.*

*689 Q.—DR. H. V. HANDE : Will the Honourable the Minister for Religious Endowments be pleased to state :—

(*a*) whether it is a fact that Archakas and temple employees of Tamil Nadu went on a one-day fast in front of the Hindu Religious and Charitable Endowments Office on 24th November 1969;

(*b*) if so, the reasons for their fast and their demand; and

(*c*) the action taken by this Government to redress their grievances?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ), (இ) & (உ): *தமிழ்நாடு அர்ச்சகர்கள், கோயிற்பணியாளர்கள் எவரும் 24—11—1969 அன்று ஒரு நாள் உண்ணா நோன்பு இருக்கவில்லை. சேலம் தமிழ்நாடு இந்து சமயச் சபையைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் கீழ்க் காணும் தமது கோரிக்கைகள் இந்து சமய அறக்கட்டளைகள் துறையினால் கவனிக்கப்படுவதற்காக இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையர் அலுவலகத்தின் முன் 24-11-1969 அன்று "உண்ணா நோன்பு" இருந்தனர் :*

(1) கோட்டைப் பெரிய மாரியம்மன் கோயிலுக்கு இராஜ கோபுரம் ஒன்றைக் கட்டுவதன் மூலமும், கருவறைத் திருப்பணியை நிறைவேற்றுவதன் மூலமும் அக்கோயிலை யாத்திரைத்தலமாக செய்தல்.

(2) வெற்றிடத்தில் திருமண மண்டபம் ஒன்று அமைத்தல்.

(3) கோயில் புறம்போக்கு நிலத்திலிருக்கும் தாற்காலிகக் கடைகளை வெளியேற்றுதல்.